1968 மார்ச் 26]

திரு. டி. மார்டின் : டெபுடி ஸ்பீக்கர் சார், அமைச்சர் அவர்கள் பதில் கூறுகின்ற நேரத்தில், பத்திரிகையிலே வந்தது தெரியாது என்று கூறினார்கள். நம்முடைய அரசில் இன்பர்மேஷன் டிபார்ட்மெண்ட் என்று ஒரு டிபார்ட்மெண்ட் இருக்கிறது. (மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் மணி அடித்தார்) I am putting the question அதிலிருந்து அமைச்சர் அவர்களுக்கு அவருடைய இலாக்கா சம்பந்தப்பட்ட முறையில் பத்திரிகையில் வருகின்ற செய்தியைத் தெரிவித்துள்ளார்களா என்று மட்டும் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய செய்திகளாக இருந்தால், அது அவசியமாகத் தெரிவிக்கப் பட்டுத்தான் வருகிறது.

மாம்பலம் ரயில் நிலையத்தருகில் சுரங்கப்பாதை

* 337 வினா.—திரு. வை. சுவாமிநாதன், திரு. நா. காசிராமன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

பழைய மாம்பலத்தில் உள்ள லேக் வியூ சாலையையும் புதிய மாம்பலத்தில் உள்ள துரைசாமி சாலையையும் இணைக்கும் ரோடின் இடையில் உள்ள ரெயில்வே கேட்டின் கீழ் ஒரு சுரங்கப் பாதை (Sub-way) அமைக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஆம்.

திரு. நா. காசிராமன் : சார், இந்தச் சுரங்கப் பாதைகள் அமைப்பதற்குக் கார்ப்பரேஷனுக்குக் கொடுக்கப்பட்ட தொகை எவ்வளவு? அதற்காக ஒதுக்கப்பட்ட தொகைகூடச் செலவழிக்கப்படவில்லை என்று அப்ரோப்பிரியேஷன் அக்கவுண்டில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தொகையை உபயோகப்படுத்தி, அந்தச் சுரங்கப் பாதைகளை வெகு விரைவிலே அமைக்க அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அந்தச் சுரங்கப் பாதையை 9 அடி உயரத்தில் கட்டுவதாக முன்னாலே திட்டமிடப்பட்டிருக்கிறது. அதை 12 அடி உயரத்தில் கட்டினால் பெரிய லாரிகளும் வண்டிகளும் செல்லக்கூடிய முறையில் இருக்கும் என்று திருத்திய மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. இதற்காக 25 லட்சம் ரூபாய் செலவிடப்படும் என்று மதிப்பிடப்பட்டபோது மாநகராட்சி மன்றம் பாதியை ஏற்றுக் கொள்ளுவதாகவும் அரசாங்கம் பாதியை ஏற்றுக்கொள்ளுவதாகவும் முடிவு செய்யப்பட்டு, அந்த வேலையைச் செய்கின்ற பொறுப்பு மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்

பட்டிருக்கிறது. ஏற்கனவே, ரூ. 3,50,000 கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது இந்த ஆண்டிலும் அதே அளவு தொகை கொடுக்கப்போவதாக முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

DR H. V. HANDE: Sir, will the Hon. Minister tell us the exact stage at which the matter is, whether any survey work has been completed and whether any work has actually been started and also the number of years within which the Ministry expects this sub-way to be completed?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அதுபற்றிய முழு விவரம் இல்லை. இருந்தாலும் நிலத்தைக் கையகப்படுத்துவதற்காக ரூ. 39,673.98 பைசாக்கள் செலுத்தி, நிலத்தை வாங்கியிருக்கிறார்கள். இப்பொழுது 12 அடி அளவு உயரமாக மாற்ற வேண்டுமென்ற முறை இருப்பதனாலே மேலும் இரண்டு பக்கங்களிலேயும் நிலத்தைக் கையகப்படுத்துவதற்குரிய ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறது. வேலைகள் துரிதமாக நடைபெறும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், சுரங்கப் பாதைகளுக்கு உள்ளே ரொம்ப அசிங்கமாக நாற்றம் அடிக்கக்கூடிய அளவுக்கு இருக்கிறது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? மழைக் காலத்தில் மழைத் தண்ணீர் தேங்கக்கூடிய அளவுக்கும் நிலைமை இருக்கிறது. இதை எல்லாம் நல்ல முறையில் அரசு கவனிக்குமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இந்தச் சுரங்கப்பாதை இன்னும் கட்டி முடிக்கப்படவில்லை. கட்டி முடித்த பிறகு அதிலே அசுத்தம் இல்லாமல் பார்த்துக் கொள்ளப்படும்.

திரு. நா. காசிராமன் : சார், முன்பு 3½ இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. மறுபடியும் அதே தொகை கொடுக்கப் போகிறோம் என்று சொன்னார்கள். அந்தத் தொகை எந்த ஆண்டு கொடுக்கப்பட்டது, வேலை எப்பொழுது தொடங்கும் என்று கூற முடியுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இதுவரை 3.50 இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. எந்தத் தேதியிலே கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதற்கான விவரம் இல்லை. இப்பொழுது நிலம் கையகப்படுத்துவதற்கான வேலைகள் எல்லாம் முடிந்தவுடன், இதர வேலைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, இந்த சப்-வே கட்டுவதற்கு அரசாங்கம் சென்னை மாநகராட்சியுடன் சேர்ந்து ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ரெயில்வே டிபார்ட்மெண்டின் பங்குத் தொகை கேட்கப்பட்டதா? கேட்கவில்லையென்றால் இனியாகிலும் கேட்பதற்கு உத்தேசம் உண்டா?

1968 மார்ச் 26]

திரு. எம். சண்முகம் : இப்படிப் பல முக்கிய நகரங்களின் ஊடே ரெயில்வே பாதைகள் செல்லுகின்ற காரணத்தால், ரெயில் செல்லுகின்ற இதுபோன்ற பகுதிகளில் சப்-வே ஏற்படுத்த வேண்டுமென்று மத்திய அரசாங்கத்திடம் நம்முடைய அமைச்சர் அவர்கள் வற்புறுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இது அந்த அந்த இடங்களிலிருந்து வருகின்ற வேண்டுகோள்களைப் பொறுத்துப் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண்கள் 322, 323, 324, 325, 326 ஆகியவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்குட்பட்டு ஒத்திவைக்கப்படுகின்றன.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி(*) இடப்பட்டிருப்பதால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. முதலமைச்சரின் விளக்கவுரை

அரசு போக்குவரத்துத் துறைத் தொழிலாளர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையே ஏற்பட்ட கைகலப்பு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, பேரவையின் 82-வது விதியின்படி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திற்கு ஓர் அறிக்கையை அளிப்பார்கள்.

*** மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** தலைவர் அவர்களே, 82-வது விதியின்படி அவைமுன், வருந்தத்தக்க நிகழ்ச்சித் தொடர் ஒன்று பற்றி எடுத்துரைக்க விரும்புகிறேன்.

நேற்று மாலை, அரசு பேருந்தில் பயணம் செய்த சட்டக் கல்லூரி மாணவருக்கும் கண்டக்டர், டிரைவருக்கும் கைகலப்பு ஏற்பட்டது.

அதைத் தொடர்ந்து சட்டக் கல்லூரி உணவு விடுதிக்குள், பேருந்தைத் தள்ளிச் சென்று மாணவர்கள் வைத்துக் கொண்டனர்.

மாணவருக்கும் பஸ் கண்டக்டர், டிரைவருக்கும் ஏற்பட்ட கைகலப்புத் தொடர்ந்தது.

ஒரு கண்டக்டரும் டிரைவரும் தாக்குதலுக்கு ஆளாகி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர்.

இதன் தொடர்பாக பேருந்து டிரைவர்களும் கண்டக்டர்களும், வேலை நிறுத்தம் செய்தனர். பேருந்துகளைப் பாதையிலே ஆங்காங்கு விட்டுவிட்டு, தாக்குதலை விசாரிக்க வேண்டுமென்று ஊர்வலம் சென்றனர்.

அதிலே ஒரு பிரிவினர் முதலமைச்சர் இல்லம் சென்று, தாக்குதலைப்பற்றிய கண்டனத்தைத் தெரிவித்தனர்.